**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 02.09.2026

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில்

## உலக தென்னை தின விழா

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் மற்றும் தென்னை வளர்ச்சி வாரியம் இணைந்து "உலக தென்னைதினம்" செப்டம்பர் 2 –ம் தேதி 2026 அன்று கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பல்கலைக்கழகத்தின் செயல் துணை வேந்தர் முனைவர் மு. இரவீந்திரன் அவர்கள் தலைமையேற்று, தென்னையின் இரகங்கள் வறட்சி மேலாண்மை, நோய் மற்றும் பூச்சிக் கட்டுபாடு, ஊடுபயிர் சாகுபடி மற்றும் மதிப்பு கூட்டுதல் போன்றவற்றில் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் செயல்பாடுகளை எடுத்துரைத்தார், இவ்விழாவில் இயக்குநர் திரு. இள அறவாழி, தென்னை வளர்ச்சி வாரியம் அவர்கள் தென்னையின் வளர்ச்சியில் வாரியத்தின் பங்கினை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார் மேலும் இவ்விழாவில் திரு. பி. சித்தார்தன், கோவை தோட்டக்கலை துணை இயக்குநர், முன்னோடி விவசாயிகளான திரு. ரஞ்சித், திரு. ஓ.வி.ஆர். சோமசுந்தரம், முனைவர் க.வெங்கடேசன், முதன்மையர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் முனைவர் ஏ. சோமசுந்தரம், இயக்குநர், வேளாண் வணிக

மேம்பாட்டு இயக்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள் முனைவர் வெ. இராஜஸ்ரீ . பேராசிரியர் மற்றும் தலைவர் அவர்கள் வறவேற்புரை ஆற்றினார்கள். இவ்விழாவில் தமிழகத்தின் பல்வேறு பகுதியிலிருந்து சுமார் 500 தென்னை விவசாயிகள் விஞ்ஞானிகள், மாணவர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் விவசாயிகள் கலந்து கொண்டனர். தென்னையின் உற்பத்தி தொழில்நுட்பங்கள், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, தென்னையில் மதிப்பு கூட்டுதல் போன்ற தொழில்நுட்ப உரைகளை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் வழங்கினார்கள். மேலும் இவ்விழாவில் தென்னை இரகங்கள், பலதரப்பட்ட தென்னை உள்ளூர் வகைகள், ஊடுபயிர்கள் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை உத்திகள், தென்னை நாற்றங்கால் போன்றவை கண்காட்சிப்படுத்தப்பட்டன. இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை வாசனை மற்றும் மணமூட்டும் பயிர்கள் துறை, தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் கோயம்புத்தூர் மற்றும் தென்னை ஆராய்ச்சி நிலையம் ஆழியார் இணைந்து செய்தது முடிவாக இணைப்பேராசிரியர் முனைவர் இரா. சித்ரா நன்றியுரையாற்றினார்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*